රාජ්‍ය පරිපාලන, ස්වදේශ කටයුතු, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
**Ministry of Public Administration, Home Affairs, Provincial Councils and Local Government**

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | **COMBINED SERVICES DIVISION**

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07,ශ්‍රී ලංකාව. | சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. | Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන
தொலைபேசி:**(94) 011- 2694560**
Telephone

ෆැක්ස්
தொலைநகல்:**(94) 011- 2692254**
Fax

ඊ-මේල්
மின்னஞ்சல்:**dgcs@pubad.gov.lk**
E-mail

වෙබ් අඩවිය
இணையத்தளம்: **www.pubad.gov.lk**
Web Site

මගේ අංකය / எனது இல / My No: COMS/DO/TRANS/Special Vacancies (Web Publish)

ඔබේ අංකය / உமது இல / Your No:

දිනය / திகதி: / Date: 2024.05.30

அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள்
அனைத்துத் திணைக்களங்களின் தலைவர்கள்

**<u>அமைச்சுக்கள், திணைக்களங்களில் நிலவும் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் வெற்றிடங்களை நிரப்புதல்.</u>**

பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் மூலம் அனுப்பப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பரீட்சிக்கும்போது, கொழும்பு, பத்தரமுல்ல பிரதேசத்தில் உள்ள பிரதான அலுவலகங்கள் மற்றும் கொழும்பு, அனுராதபுரம், பொலன்னறுவை, புத்தளம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, நுவரெலியா முதலிய மாவட்டங்களில் உள்ள மாவட்ட மற்றும் பிரதேச அலுவலகங்கள் மற்றும் அமைச்சுக்கள், திணைக்களங்களின் கீழ் மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுவது அவதானிக்கப்பட்டது.

02. மேலும், அமைச்சுக்கள், திணைக்களங்களில் சில மாவட்டங்களில் உள்ள மாவட்ட மற்றும் பிரதேச அலுவலகங்களில் மற்றும் மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களில் இணைந்து அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மிகையாகப் பணிபுரிந்து வருவது அவதானிக்கப்பட்டது.

03. அங்கீகரிக்கப்பட்ட பதவிகளைத் தாண்டி உத்தியோகத்தர்களை இணைக்க முடியாமையினால் உங்கள் நிறுவனத்தின் கீழ் உள்ள பிரதான அலுவலகங்கள், மாவட்ட /பிரதேச அலுவலகங்கள், மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்களில் நிலவும் தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இணைத்துக் கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை முறையாகக் கண்டறியுமாறு தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

04. மேலும், மிகை உத்தியோகத்தர்கள் இருப்பின் அவர்கள் விருப்பம் தெரிவிக்கும் சேவை நிலையங்களுக்கு இடமாற்றம் செய்வதற்கான CS/T/01 படிவத்தின் படி இடமாற்றக் கோரிக்கைகளை சமர்ப்பிக்குமாறும் இடமாற்றம் கோரியுள்ள இடங்களில் வெற்றிடங்கள் காணப்படின் அந்த இடமாற்றங்களை மேற்கொள்ளலாம் என உரிய உத்தியோகத்தர்களுக்குத் தெரிவிக்குமாறு மிகவும் தயவுடன் அறிவித்துக்கொள்கிறேன்.

ஒப்பம்/. எஸ். ஆலோகபண்டார
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்